# காலச்சுவடு பதிப்பகம்

# புத்தகப் பட்டியல்

## 2012 - 2013


**தலைமை அலுவலகம்**

**669, கே.பி.சாலை**
**நாகர்கோவில் 629001**
தொலைபேசி: **91- 4652 - 278525**
கைபேசி: **9677778863**
மின்னஞ்சல்: **nagercoil@kalachuvadu.com**


காலச்சுவடு

**2012 வெளியீடுகள்: 122**
**புதிய வெளியீடுகள்: 57**
**மறுபதிப்புகள்: 65**
**மொத்த வெளியீடுகள்: 512**
**பதிப்புகள்: 919**
**விற்பனையில்: 480**


**கிளை அலுவலகம்**

**புதிய எண் 257**
**(பழைய எண் 130)**
**திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை**
**சென்னை – 600005**
தொலைபேசி: **044 - 2844 1672, 4215 5972**
மின்னஞ்சல்: **chennai@kalachuvadu.com**

# வெளியீடுகள்


**நாவல்**

**நவீன உலக கிளாசிக் நாவல் வரிசை**

**பட்டு** 7
அலெசான்ட்ரோ பாரிக்கோ
தமிழில்: சுகுமாரன்

**நவீனத் தமிழ் கிளாசிக் நாவல் வரிசை**

**மோகமுள்** 7
தி. ஜானகிராமன்

**வெக்கை** 7
பூமணி

**நாவல்**

**சின்ன விஷயங்களின் கடவுள்** 8
அருந்ததி ராய்
தமிழில்: ஜி. குப்புசாமி

**ஆளண்டாப் பட்சி** 8
பெருமாள்முருகன்

**குன்னிமுத்து** 8
குமாரசெல்வா

**சிறுகதை**

**நவீன இந்திய கிளாசிக் சிறுகதை வரிசை**

**பெருமரங்கள் விழும்போது** 9
என்.எஸ். மாதவன்
தமிழில்: நிர்மால்யா

**நவீனத் தமிழ் கிளாசிக் சிறுகதை வரிசை**

**எப்போதும் முடிவிலே இன்பம்** 9
புதுமைப்பித்தன்
தேர்வும் தொகுப்பும்: ராஜகோபாலன். ஜா

**ராஜா வந்திருக்கிறார்** 9
கு. அழகிரிசாமி
தேர்வும் தொகுப்பும்: பழ. அதியமான்

**சாலப்பரிந்து . . .** 9
நாஞ்சில்நாடன்
தேர்வும் தொகுப்பும்: மோகனரங்கன்

**சிறுகதைகள்**

**உக்கிலு** 11
குமாரசெல்வா

**ஏமாறும் கலை** 10
யுவன் சந்திரசேகர்

**ஒரு பாதையின் கதை** 11
குப்பிழான் ஐ. சண்முகன்

**கண்ணீரினூடே தெரியும் வீதி. . .** 10
தேவமுகுந்தன்

**குதிரைக்காரன்** 10
அ. முத்துலிங்கம்

**சாபம்** 11
சல்மா

**நானும் ஒருவன்** 10
சுரேஷ்குமார இந்திரஜித்

**பள்ளம்** 11
சுந்தர ராமசாமி

**வேப்பெண்ணெய்க் கலயம்** 11
பெருமாள்முருகன்

**வாழ்க்கை வரலாறு**

**தேவதாசியும் மகானும்** 6
பெங்களூரு நாகரத்தினம்மா – வாழ்வும் காலமும்
வெங்கடகிருஷ்ணன் ஸ்ரீராம்
தமிழில்: பத்மா நாராயணன்

**பெரியாரின் நண்பர்** 5
டாக்டர் வரதராஜுலு நாயுடு வரலாறு
பழ. அதியமான்

**புயலுக்குப் பின்னே பூந்தென்றல்** 6
சுப. உதயகுமாரன்

**ராஜா ஸாண்டோ** 5
டி.வி. ராமநாத்
பதிப்பாசிரியர்: சு. தியடோர் பாஸ்கரன்

**வீணையின் குரல்: எஸ். பாலசந்தர்** 6
ஓர் வாழ்க்கை சரிதம்
விக்ரம் சம்பத்
தமிழில்: வீயெஸ்வி

**லதிஃபே ஹனிம்** 6
கெமால் பாஷாவின் மனைவி
இபெக் சாலிஷ்லர்
தமிழில்: பாபு ராஜேந்திரன்

**அனுபவம்**

**பீமாயணம்** 19
தீண்டாமையின் அனுபவங்கள்
(சித்திரங்களில் அம்பேத்கர் வாழ்க்கைச் சம்பவங்கள்)
தமிழில்: அரவிந்தன்

மிச்சம்மீதி 5
ஓர் அனுபவக் கணக்கு
எம்.பி. மாரியப்பன் & ஆனந்த் பாண்டியன்
தொகுப்பும் மொழிபெயர்ப்பும்: வே. கமலாலயன்

## கவிதைகள்
முதல் கவிநூல் வரிசை

அன்று வேறு கிழமை 12
ஞானக்கூத்தன்

கோடைகாலக் குறிப்புகள் 12
சுகுமாரன்

நவீனத் தமிழ் கிளாசிக் கவிதை வரிசை

நகுலன்
தேர்ந்தெடுத்த கவிதைகள் 12
தொகுப்பாசிரியர்: யுவன் சந்திரசேகர்

## கவிதைகள்

வாரிச் சூடினும் பார்ப்பவரில்லை 12
(கவித்தொகை)
சீனாவின் 'சங்க இலக்கியம்'
தமிழில்: பயணி

இருள் தின்ற ஈழம் 14
தேவஅபிரா

என்னைக் கடவுளாக்கிய தவிட்டுக்குருவி 13
வா. மணிகண்டன்

ஏழிலைக் கிழங்கின் மாமிசம் 14
இரா. சின்னசாமி

காமத்திப்பூ 13
சுகிர்தராணி

சிறகு முளைத்த பெண் 13
ஸர்மிளா ஸெய்யித்

நான் ஆத்மாநாம் பேசுகிறேன் 14
ராணி திலக்

நான்காவது சிங்கம் 13
செல்வராஜ் ஜெகதீசன்

பகல் தண்டவாளத்தில் ரயில் 14
சோலைக்கிளி

யாரோ ஒருவனுக்காக 13
சுந்தர ராமசாமி

வெள்ளிசனிபுதன்
ஞாயிறுவியாழன்செவ்வாய் 14
பெருமாள்முருகன்

வியூகம் கொள்ளும் காய்கள் 15
பி. மதியழகன்

WILD GIRLS, WICKED WORDS 20
Bilingual Edition
Poems of **Malathi Maithri, Salma, Kutti Revathi Sukirtharani**
Translated and Edited by **Lekshmi Holmstrom**

## கட்டுரைகள்

ஈழம்
சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள் 16
ஃபிரான்ஸிஸ் ஹாரிசன்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

முள்ளிவாய்க்காலில் தொடங்கும்
விடுதலை அரசியல் 16
பா. செயப்பிரகாசம்

அணுசக்தி அரசியல் 17
எம்.பி. பரமேசுவரன்
தமிழில்: தே. மனோ

அற்ற குளத்து அற்புத மீன்கள் 16
தேவிபாரதி

ஆடம் ஸ்மித் முதல் கார்ல் மார்க்ஸ் வரை 19
செவ்வியல் அரசியல் பொருளாதாரம்
எஸ். நீலகண்டன்

'ஓ'ஹோ பக்கங்கள் 18
ஞாநி

கூடங்குளம் 18
(அணுசக்தியும் அணு ஆயுதங்களும்)
தேர்வும் தொகுப்பும்: செல்லப்பா

தமிழ் அழகியல் 17
தி.சு. நடராஜன்

நானும் என் எழுத்தும் 17
சுந்தர ராமசாமி
தொகுப்பு: கே.என். செந்தில்

நீரில் விளக்கெரியும் நந்திக்கடல் 17
இளைய அப்துல்லாஹ்

பசுமைப்புரட்சியின் கதை 16
சங்கீதா ஸ்ரீராம்

விழுப்புரம் படுகொலை 1978 16
D. டேவிட்
பதிப்பாசிரியர்: ஸ்டாலின் ராஜாங்கம்

## நாட்டுப்புறக் கதைகள்

அர்ச்சுனனின் தமிழ்க் காதலிகள் 18
அ.கா. பெருமாள்

## காலச்சுவடு பதிப்பக வைப்பு நிதித் திட்டம்

காலச்சுவடு பதிப்பகத்தில் ரூ. 5000 டெபாசிட் செய்யுங்கள். தீவிர வாசகரான உங்களுக்கு இதில் பல சலுகைகள் உள்ளன.

1. ரூ. 1000க்கான காலச்சுவடு வெளியீடுகளை அன்பளிப்பாக உடனே பெற்றுக்கொள்ளலாம்.
2. பின்னர் ஆண்டுதோறும் நீங்கள் தேர்ந்தெடுக்கும் ரூ.1000க்கான காலச்சுவடு வெளியீடுகள் உங்களுக்கு அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். ஒரு குறிப்பிட்ட ஆண்டில் நீங்கள் தேர்வுசெய்யும் நூல்களுக்கான மொத்தத் தொகை 1000 ரூபாய்க்குக் குறைவாக இருந்தால் எஞ்சுகின்ற தொகைக்கு உரிய நூல்களை அடுத்த ஆண்டிலோ பின்னரோ பெற்றுக்கொள்ளலாம்.
3. ரூ. 5000 வரைவோலையாக அனுப்புங்கள். காசோலையாக இருந்தால் ரூ. 150 வங்கி கமிஷன் சேர்த்து ரூ. 5150 அனுப்புங்கள்.
4. டெபாசிட் காலம் முழுவதும் காலச்சுவடு இதழ்கள் அன்பளிப்பாகத் தொடர்ந்து அனுப்பிவைக்கப்படும்.
5. கடைசியாக நூல்கள் பெற்றுக்கொண்ட ஆண்டிலிருந்து ஒரு ஆண்டுக்குப் பிறகு டெபாசிட் தொகையை முழுமையாகத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.
6. **காலச்சுவடு பதிப்பகம் ICICI நாகர்கோவில் வங்கிக் கணக்கு எண் 609505010967**

## சந்தா செலுத்தவும் நூல்களைப் பெறவும் சில எளிய வழிமுறைகள்

காலச்சுவடுக்குச் சந்தா செலுத்த விரும்புவோர் மற்றும் காலச்சுவடு வெளியீடுகளை நேரடியாகப் பெறப் பணம் செலுத்த விரும்புவோருக்கான சில எளிய வழிமுறைகள்

**காலச்சுவடு பதிப்பகம்** ICICI **நாகர்கோவில் வங்கிக் கணக்கு எண்: 609505010967.**

**காலச்சுவடு பப்ளிக்கேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்** AXIS Bank **நாகர்கோவில் வங்கி கணக்கு எண்: 911020062575167.**

ICICI அல்லது Axis Bankஇன் எந்தக் கிளையிலிருந்தும் காலச்சுவடு அல்லது காலச்சுவடு பக்ளிக்கேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் கணக்கு எண்ணுக்குச் சந்தா அல்லது புத்தக விலையைப் பணமாக டெபாசிட் செய்யலாம். வங்கிக் கமிஷன் இல்லை.

பிற வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் Kalachuvadu Pathippagam, அல்லது Kalachuvadu Publications Pvt. Ltd. பெயருக்குக் காசோலை எழுதி, காலச்சுவடு கணக்கு எண் குறிப்பிட்டு உள்ளூர் ICICI அல்லது Axis வங்கியில் டெபாசிட் செய்யலாம். கமிஷன் இல்லை.

ICICI அல்லது Axis வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் Kalachuvadu Pathippagam அல்லது Kalachuvadu Publications Pvt. Ltd., பெயருக்கு செக் எழுதி, காலச்சுவடு கணக்கு எண் குறிப்பிட்டுப் பணம் transfer செய்துவிடலாம். கமிஷன் இல்லை.

Internetவழி காலச்சுவடு கணக்குக்குப் பணம் செலுத்தலாம். தனி கமிஷன் உண்டு. NEFT / RTGS Transfer செய்வதற்கு:

Axis Bank Branch Code 405 / IFSC Code - UTIB0000405 (Kalachuvadu Publications Pvt. Ltd.)

ICICI Branch Code - 6095 / IFSC Code - ICIC0006095 (Kalachchuvadu Pathippagam)

SBI Branch Code - 0880 / IFSC Code - SBIN0000880. (Kalachuvadu Publications Pvt. Ltd.)

ICICI அல்லது Axis வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் வரைவோலை (Draft) எடுப்பதற்குப் பதில் எங்களது பெயருக்கு குறிப்பிட்ட வங்கியின் ‘at par cheque’ எழுதிக் காலச்சுவடு முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

**அயலிலிருந்து** Electronic Money Transfer (US $) மூலம் பணம் செலுத்தத் தேவையான தகவல்கள்:

**ICICI வங்கி:** ICICI Bank Ltd, Nagercoil Branch, Tamilnadu, India. **Branch Code**: 6095, **A/c No**: 609505010967, **Swift No:** CHASUS33XXX, **Beneficiary**: Kalachchuvadu Pathippagam.

**SBI வங்கி:** State Bank of India, Nagercoil Branch, Tamilnadu, India. **Branch Code:** 0880, **A/c No**: 30780183003, **Swift No**: SBININBB456, **Beneficiary:** Kalachuvadu Publications Pvt. Ltd.

மேற்படி வழிமுறைகளில் பணம் அனுப்புபவர்கள் தங்கள் முகவரியுடன் ரசீது நகல் மற்றும் தேவைகளைக் குறிப்பிட்டுக் **Kalachuvadu, 669 K.P. Road. Nagercoil 629 001, Tamil Nadu, India என்ற முகவரிக்கு கடிதம் எழுத வேண்டுகிறோம்.**

**nagercoil@kalachuvadu.com வழி தகவல்கள் அனுப்புபவர்கள் ரசீதை Scan செய்து பெயர், முகவரி, தேவை போன்ற விபரங்களுடன் அனுப்ப வேண்டும்.**

# தன்வரலாறு

## மிச்சம் மீதி


### ஓர் அனுபவக் கணக்கு

நினைவலைகள்

**எம்.பி. மாரியப்பன், ஆனந்த் பாண்டியன்**

தொகுப்பும் மொழிபெயர்ப்பும் : கமலாலயன்

**ரூ. 190 (வி.பி.பி.யில் ரூ. 190)**




பத்து வயதில் தராசைக் கையில் பிடித்த ஒரு மனிதரின் கதை இது. தாத்தா தனது விரல்களைக் காட்டி இதுதான் கடை என்கிறார். கடை மூடப்படும் பொழுதில் அமெரிக்காவின் பால்டிமோரிலிருந்து வந்திறங்கும் பேரன் அவர் நிறுத்திவைத்திருந்த பழங்களை அறிவுலகின் மொழி கொண்டு புதியதொரு தராசில் நிறுத்தி நமக்கு அளிக்கிறார். ஒருவகையில் தாத்தாவும் பேரனும் சேர்ந்து விளையாடும் விளையாட்டின் எழுத்து வடிவமே இந்நூல்.

ஒரு கண்ணாடித் தகடை ஒளி ஊடறுத்துச் சிதறிப் பாய்வதைப் போல உலக அரசியல் நிகழ்வுகளும், கால ஓட்டங்களும் ஒரு சாமானியனின் வாழ்வை ஊடறுத்து எப்படியெல்லாம் பயணிக்கின்றன என்பதைத் தெளிவாகப் பார்க்க முடிகிற கதை இது. புற நிகழ்வுகளும் தற்செயல்களும் தனி மனித வாழ்வைத் தம்போக்கில் எப்படியெல்லாம் கையாளுகின்றன என்பதை இவ்வளவு தூரத்திலிருந்து பார்க்கும்பொழுதுதான் துல்லியமாகத் தெரிகிறது.

**சு. வெங்கடேசன்**
**முன்னுரையிலிருந்து**


## ராஜா ஸாண்டோ

(வாழ்க்கை வரலாறு)

**டி.வி. ராமநாத்**

ப.ர்.: சு. தியடோர் பாஸ்கரன்

**ரூ. 90 (வி.பி.பி.யில் ரூ. 100)**





பேசாப்படக் காலத்தில், அரங்கில் ஜிம்னாஸ்டிக்ஸ் செய்துகாட்டித் தனது திரைப் பணியைத் தொடங்கிய இந்திய சினிமாவின் முன்னோடி ராஜா ஸாண்டோவின் வாழ்க்கையில் சில பகுதிகளை இந்நூல் பதிவு செய்கின்றது. பம்பாயில் நடிகராகப் புகழ் பெற்று, சில படங்களை இயக்கினார். சென்னை வந்து அதே பாதையைத் தொடர்ந்தார். இவர் சென்னையில் இயக்கிய ஒரு முக்கியமான படம் 'பேயும் பெண்ணும்' (1930). ஒலி வந்தபின் 'வசந்தசேனா' (1936), 'ஆராய்ச்சிமணி' (1942) முதலிய படங்களை இயக்கினார். தென்னிந்திய சினிமாவின் மௌன சகாப்தத்தின் மீது சிறிது வெளிச்சத்தை இந்தப் பதிவுகள் பாய்ச்சுகின்றன.

## பெரியாரின் நண்பர்

டாக்டர் வரதராஜுலு நாயுடுவரலாறு

**பழ. அதியமான்**

**ரூ. 375 (வி.பி.பி.யில் ரூ. 375)**




தென்னாட்டுத் திலகர் என்று புகழப்பெற்ற சேலம் டாக்டர் வரதராஜுலு நாயுடுவின் (1887–1957) வாழ்க்கை வரலாறு இந்நூல். தன் பேச்சாற்றலால் தமிழகக் காங்கிரசை மக்களிடம் கொண்டுசென்ற இப் பேராளுமையின் சமூக, அரசியல், பத்திரிகைத் துறைப் பங்களிப்பை விவரிக்கும் வரலாறு இது.

தமிழக சமூக நீதிப் போராட்டங்களான சேரன்மாதேவி குருகுலப் போராட்டம், காஞ்சிபுரம் காங்கிரசு மாநாடு, கல்பாத்தி தலித் நுழைவுத் தடுப்பு, (குலக்) கல்வித் திட்ட எதிர்ப்பு . . . உள்ளிட்ட அரை நூற்றாண்டுத் தமிழக சமூக அரசியல் வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளைச் சமகால ஆதாரங்களின் அடிப்படையில் இந்நூல் விவரிக் கிறது.

வ.உ.சி., பெரியார், இராஜாஜி, காந்தி, சாவர்கர், ஷியாமா பிரசாத் முகர்ஜி, கே.எம். பணிக்கர் தொடர்பில் இது வரை வெளிவராத பல முக்கியச் செய்திகள் முதன் முறையாக இந்நூலில் இடம்பெறுகின்றன.

அக்கால இந்திய – தமிழக அரசியல் பின்புலத்தில் வரதராஜுலு நாயுடுவின் வரலாறு சுவாரசியமான நடையில் எழுதப்பட்டுள்ளது.

❍

தங்கள் தேச சேவையின் உத்தேசம் எதுவாயிருந்தாலும், தங்கள் சுயராஜ்யத்தின் கருத்து எதுவாயிருந்தாலும், எனது தொண்டிற்கும் அதன் கருத்துக்கும் தங்கள் ஒத்துழைப் பும் இருந்தால்தான் முற்றிலும் நிறைவேறும் என்பது எனக்குத் தெரியும்.

**– பெரியார் (1925)**
**வரதராஜுலுவுக்கு எழுதிய கடிதத்தில்.**

# வாழ்க்கை வரலாறு

## தேவதாசியும் மகானும்

பெங்களூரு நாகரத்தினம்மா – வாழ்வும் காலமும்

**வெங்கடகிருஷ்ணன் ஸ்ரீராம்**

தமிழில்: **பத்மா நாராயணன்**

**ரூ. 175 (வி.பி.பி.யில் ரூ. 175)**




'நாகரத்தினம்மா நமக்கு விட்டுச் சென்றிருப்பதுதான் என்ன? வாழ்க்கைத் தரத்தில் கீழ்மட்டத் திலிருந்து தன்னுடைய அயராத உழைப்பு மற்றும் திறமையினாலேயே சிகரங்களை அடைந்தவர் அவர். கணக்கில்லாத பேரும் புகழும் பணமும் சம்பாதித்த பிறகும் தம் வெற்றிகளின் மீது சாய்ந்து ஓய்வெடுத்துவிடாமல் தமது ஆசைகள் ஒவ்வொன்றையும் நிறைவேற்றத் தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருந்தவர்.

சங்கீத உலகில் பெண்கள் ஆண்களுக்குச் சமம் என்பதை நிலைநிறுத்தத் தம் ஆயுட்காலம் முழுக்க உழைத்தார். பிற்பட்டதாகக் கருதப்பட்ட சமூகத் திலிருந்து வந்திருந்த போதிலும் சுயபச்சாதாபம் என்னும் சகதியில் உழன்று மற்றவர்களிடம் உதவியை நாடாதவர். அதற்கு மாறாக, தமது பின்னணியைப் பற்றிய பெருமிதம் அவருக்கு இருந்தது. உலகம் தம்முடைய மதிப்பைக் கண்டு, தம்முடன் பழகுவதைப் பெரும் பேறாகக் கருத வைத்தார். தூற்றப்பட்ட தேவதாசி என்ற நிலையிலிருந்து உயர்ந்து இறுதியில் ஒரு புனிதரின் நிலையை அடைந்தார்.'

(நூலிலிருந்து)


## வீணையின் குரல்: எஸ். பாலசந்தர்

ஓர் வாழ்க்கை சரிதம்

**விக்ரம் சம்பத்**

தமிழில்: **வீயெஸ்வி**

**ரூ. 350 (வி.பி.பி.யில் ரூ. 350)**




கர்நாடக இசை உலக வரலாற்றில் காலத்துக்கும் நிலைத்து நிற்கும் பெயர் எஸ். பாலசந்தர். சர்ச்சை களின் நாயகனாகத் திகழ்ந்தவர் இந்த வீணை மேதை. யாருக்காக வும் எதற்காகவும் எதிலும் சமரசம் செய்துகொள்ளாதவர். திரைப்படத் துறையில் தனி முத்திரை பதித்தவர். இசைத்துறையில் சாதனைகள் பல படைத்தவர். உலகம் நெடுகிலும் வீணையின் புகழ் பரப்பியவர். 'வீணையென்றால் பாலசந்தர் ... பாலசந்தர் என்றால் வீணை' என்னும் அளவுக்கு வீணையுடனும் இசையுடனும் இரண்டறக் கலந்தவர்.

எஸ். பாலசந்தரின் பிறப்பு முதல் இறுதிக்காலம் வரையிலான சம்பவங்களையும் விறுவிறுப்பான தகவல்களையும் சுவைபட விவரிக்கும் வாழ்க்கைக் கதை இந்த நூல்.


## லதிஃபே ஹனிம்

**கெமால் பாஷாவின் மனைவி**

**இபெக் சாலிஷ்லர்**

தமிழில்: **பாபு ராஜேந்திரன்**

**ரூ. 275 (வி.பி.பி.யில் ரூ. 275)**




லதிஃபே ஹனிம் இல்லாமல் ஆட்டாடூர்க் கெமால் பாஷாவின் வாழ்க்கை வரலாற்றை எழுத முடியாது. கெமால் பாஷா இல்லாமல் துருக்கியின் வரலாற்றை எழுத முடியாது. இது லதிஃபேவின் வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல. இது ஆட்டாடூர்க்கின் வாழ்க்கை வரலாறும், துருக்கியின் அரசியல், சமூக, வரலாறுங்கூட.

லதிஃபே, ஆட்டாடூர்க்குடன் வாழ்ந்தது இரண்டரை வருடங்களே. இருவரும் ஒருமித்த சிந்தனை கொண்டவர்கள். பெண்ணுரிமைகளை ஏற்றுக்கொண்டவர்கள். எதிர்காலத் துருக்கியப் பெண்ணின் முன்மாதிரியாக முஸ்தஃபா கெமாலால் அடையாளங்காட்டப்பட்டவர் லதிஃபே. இருப்பினும் இருவரும் ஏன் குறுகிய காலத்தில் பிரிந்தனர்?


அவரைப்பற்றி ஏன் அவதூறுகள் பரப்பப்பட்டன? இவற்றுக் கெல்லாம் விடைகாண முயற்சிக்கிறது இந்நூல்.

இறுதி மூச்சுவரை ஆட்டாடூர்க் மீது கொண்ட காதலை இதயத்தில் பூட்டிவைத்திருந்த லதிஃபேவின் துன்பியல் காதல் கதை.

## புயலுக்குப் பின்னே பூந்தென்றல்

**சுப. உதயகுமாரன்**

**ரூ. 75 (வி.பி.பி.யில் ரூ. 85)**




1981 முதல் 1987வரை சுப. உதயகுமாரன் எத்தியோப்பியாவில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றும்போது நிகழ்ந்த தகராறு அனுபவங்களின் தொகுப்பு.

கூடங்குளம் போராட்ட ஒருங்கிணைப்பாளராக நன்கு அறியப்பட்ட சுப. உதயகுமாரனின் இளமைக்கால எத்தியோப்பிய அனுபவங்களை உள்ளடக்கமாகக் கொண்டது இந்நூல்.

அவரை ஓர் ஆளுமையாக மாற்றும் வல்லமை கொண்டவையாக அமைந்திருக்கின்றன எத்தியோப்பியாவில் அவருக்கு நேர்ந்த அனுபவங்கள்.

வாழ்க்கையில் தான் எதிர்கொண்ட தகராறுகளைக் கையாண்ட அனுபவங்களைத் திறந்த மனத்துடன் சமூகத்தின்முன் வைப்பதன் மூலம் மனிதர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு ஓர் உபாயம் அமைந்துவிடாதா என்ற ஏக்கத்தின் வெளிப்பாடே இந்நூல்.

# கிளாசிக் வரிசை – நாவல்

நவீன உலக கிளாசிக் நாவல் வரிசை

## பட்டு

### அலெசான்ட்ரோ பாரிக்கோ

தமிழில்: **சுகுமாரன்**

**ரூ. 95 (வி.பி.பி.யில் ரூ. 105)**




“திரும்பி வா. இல்லையென்றால் இறந்துவிடுவேன்”

●

முன்னாள் ராணுவத்தினனான ஹெர்வே ஜான்கர் புதிய தொழிலான பட்டு வியாபாரத்துக்காக பிரான்சிலிருந்து உலகின் கடைசியான ஜப்பானுக்குப் போகிறான். தரமான பட்டுப் புழுக்களைக் கொள்முதல் செய்வது அவன் நோக்கம். அங்கே புதிரான சூழலில் ஒரு பெண்ணைச் சந்திக்கிறான். தொடாமலும் பேசாமலும் அவர்களுக்குள் வளரும் உறவு நாடு திரும்பியும் அவனை வசீகரிக்கிறது. மீண்டும் மீண்டும் கடல் கடந்து செல்கிறான். அவள் ரகசியமாகக் கொடுக்கும் கடிதம் அவனை அலைக்கழிக்கிறது. அது அவனால் வாசிக்க முடியாத மொழியில் எழுதப்பட்டது. வாசிக்க வைத்துத் தெரிந்துகொண்ட பின்பு அதில் மறைந்திருக்கும் மர்மம் அவனை வசியப்படுத்துகிறது. திகைப்படையச் செய்கிறது.

●

பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பின்புலத்தில் எழுதப்பட்ட இந்த நாவல் ஓர் உருவகக் கதையாகவும் வரலாற்றுப் புனைவாகவும் காதல் கதையாகவும் காமத்தின் தேடலாகவும் பவுத்த தரிசனமாகவும் வெவ்வேறு வடிவம் கொள்கிறது.

●

இருபதுக்கும் அதிகமான உலக மொழிகளில் பெயர்க்கப்பட்ட அலெசான்ட்ரோ பாரிக்கோவின் இத்தாலிய மொழி நாவல் பிரெஞ்சு – கனடிய இயக்குநர் ஃப்ரான்ஸ்வா கியார்த் இயக்கத்தில் திரைப்படமாகவும் வெளிவந்திருக்கிறது.

நவீனத் தமிழ் கிளாசிக் நாவல் வரிசை


## மோகமுள்

### தி. ஜானகிராமன்

**ரூ. 525 (வி.பி.பி.யில் ரூ. 525)**

இந்த நாவல் பற்றி இலக்கியத் தரம் அறிந்தவர்கள் பெருமைப் படலாம். மனிதனின் பலத்தையும் பலவீனத்தையும் துருவி ஆராய்ந்து எழுதப்பட்டுள்ள ஜானகிராமனின் ‘மோக முள்’ தமிழில் நல்லதோர் சாதனை – பெரியதோர் சாதனை.


**– க.நா. சுப்ரமண்யம்**




## வெக்கை

### பூமணி

**ரூ. 140 (வி.பி.பி.யில் ரூ. 140)**




சாதாரணமானதொரு பழி தீர்க்கும் கதையாக முதல் வாசிப்புக்குத் தென்படும் ‘வெக்கை’ ஒரு இலக்கியப் படைப்பு என்னும் ரீதியில் நுட்பமான பல பரிமாணங்களைக் கொண்டது. ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் நிரம்பிய ஓர் அமைப்பின் முரண்களைப் பற்றியும் அவற்றைத் தீர்மானிக்கும் சமூகப் பொருளாதாரக் காரணிகளைப் பற்றியும் ஆராயும் முனைப்புக் கொண்ட ஒரு நாவல் என்று சொல்வது இந்த நாவலைப் பற்றிய ஒரு எளிய புரிதலாகவே இருக்க முடியும். பூமணி எழுப்பும் கேள்விகள் இவற்றைக் காட்டிலும் முக்கிய மானவை. ஒரு கலைஞன் என்ற முறையில் பூமணி பழியின் அரசியலையும் அறத்தையும் கேள்விக்குள்ளாக்குகிறார். இவ்வுலகின் மீதான, தான் வாழும் நிலத்தின் மீதான ஆச்சரியங்களிலிருந்தும் குழந்தைமையின் பேதமையிலிருந்தும் விடுபட முடியாத ஒரு பதினைந்து வயதுச் சிறுவனின் மனம் பழியின் கொழகொழப்பான திரவத்தால் நிரப்பப்படும் பயங்கரம் எளிய, மிருதுவான சொற்களால் கலைப்படுத்தப்பட்டிருக்கிறது. வெற்றி, தோல்வி பற்றிய புழக்கத்திலிருக்கும் சொற்களைத் தன் தணிந்த குரலால் மறுக்கும் ஒரு கலைஞன் அவற்றின் விளைவுகளைக் குறித்துத் தன் வாசகனோடு நிகழ்த்தும் மிகத் துக்ககரமான உரையாடல் எனவும் இந்நாவலைச் சொல்லலாம்.

**இணையம் வழி காலச்சுவடு நூல்களைப் பெற்றிட**

காலச்சுவடு நூல்களை இணையத்தின் வழியாக இந்தியாவிலும் அயலிலும் வசிப்பவர்கள் எளிதாகத் தற்போது பெற்றுக்கொள்ளலாம். தொடர்புக்கு

**http://www.chennaishopping.com**
**http://www.flipkart.com**
**http://discoverybookpalace.com**
**http://www.nammabooks.com**
**www.nannool.com.**
**http://www.newbooklands.com**
**https://www.nhm.in/shop/Kalachuvadu/**
**http://www.panuval.com**
**http://www.udumalai.com**
**www.noolulagam.com**
**http://www.tamilbooksonline.in**

# நாவல்

## சின்ன விஷயங்களின் கடவுள்

(1997ஆம் ஆண்டிற்கான புக்கர் பரிசுபெற்ற நாவல்)

### அருந்ததிராய்

தமிழில்: ஜி. குப்புசாமி

ரூ. 295 (வி.பி.பி.யில் ரூ. 295)




சாதி, மதம், தேசியம் ஆகியவற்றின் அங்கிகளை கிழித்தெறிந்து மானுடத்தின் நிர்வாணத்தை பகிரங்கப் படுத்தும் இப்படியொரு புத்தகம் மிக அரிதாகவே காணக் கிடைக்கும்.

*Daily Telegraph*

## ஆளண்டாப் பட்சி

### பெருமாள்முருகன்

ரூ. 195 (வி.பி.பி.யில் ரூ. 140)




பெருமாள்முருகனின் ஆறாவது நாவல் இது. சக மனிதரோடு சேர்ந்து வாழ்வதுதான் இன்றைய காலத்தின் பெரும்சவால். மனித உறவுகள் எத்தருணத்திலும் முறுக்கிக்கொள்ள லாம்; பிணையவும் செய்யலாம். அதற்குப் பெரும்காரணங்கள் தேவை யில்லை, அற்பமான ஒன்றே போது மானது. கூட்டுக்குடும்பப் பிணைப்பி லிருந்து உறவுகளின் நிர்ப்பந்தத்தால் விடுபட்டுப் புலம்பெயர்ந்து வேற்றிடத் தில் நிலைகொள்ளும் உழவுக் குடும்பம் ஒன்றின் போராட்டமே இந்நாவல். மனிதர்களை அண்டவிடாத அதேசமயம் நல்லவர்களுக்கு உதவும் பண்பும் கொண்ட பிரம்மாண்டமான பறவையாகக் கொங்கு நாட்டுப்புறக் கதைகளில் வரும் ஆளண்டாப் பட்சியின் இயல்புகள் இந்நாவல் மாந்தர்கள் பலருக்கும் பொருந்திப் போகின்றன.

**விரைவில்**
**காலச்சுவடு வெளியீடாகத் தமிழில்**

**Snow**

by

***Orhan Pamuk***

## குன்னிமுத்து

### குமாரசெல்வா

ரூ. 345 (வி.பி.பி.யில் ரூ. 345)




குமாரசெல்வாவின் முதல் நாவல் இது. பெண்மையின் தகுதி வளமை எனக் கொண்டாடும் உலகில் அது இல்லாத இருளியின் கறுத்த அனுபவத்தை ஊடுருவுகிறது நாவல். உலகை வளமாக்க அவள் மரங்களை நட்டுப் பள்ளிக் குழந்தைகளின் பசி தீர்க்கிறாள். தன்னை மணந்து கொண்டவனுக்கு இன்னொரு பெண்மூலம் பிறந்த குழந்தையைத் தனது மகளாக வளர்த்து அவளுக்கொரு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்து விட்டு, தனக்கு இல்லாத வாழ்க்கை நோக்கி தனிமைப் பாதையில் நடப்பதாக நிறைவுறாமல் தொடர்கிறது கதை.

குமரி மண்ணின் மத அரசியல், பின்னணி நிழலாகப் படரும் வகையில் வரையப்பட்ட இந்த நாவல் சித்திரம் இதுவரைக்கும் சொல்லப்படாத பல பக்கங்களை நமக்குத் திறந்துகாட்டுகிறது.

**விரைவில்**
**காலச்சுவடு வெளியீடாகத் தமிழில்**

நோபெல் பரிசு பெற்ற

**காப்ரியேல் கார்சியா மார்க்கேஸ்**

எழுதிய

**தனிமையின் நூறு ஆண்டுகள்**

தமிழில்:

**ஞாலன் சுப்ரமணியன், சுகுமாரன்**

விலை ரூ. 325

மார்க்கேஸின் நாவல் இதுவரை 37 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. எந்த மொழியில் பெயர்க்கப்பட்டாலும் அந்த மொழியின் படைப்பாகவே மாறுகிறது. அந்த மொழிகளின் இதிகாசங்களுக்கு நிகராகப் புகழ் பெற்று விடுகிறது.

1982இல் நோபெல் இலக்கியப் பரிசு பெற்ற மார்க்கேஸின் இந்த நாவல் இன்று வரை இரண்டு கோடி பிரதிகளுக்குமேல் விற்பனையாகியுள்ளது. இன்றும் தொடர்ந்து வாசிக்கப்படுகிறது.

நோபெல் இலக்கியப் பரிசு பெற்ற முப்பதாம் ஆண்டு நிறைவில் காப்ரியேல் கார்சியா மார்க்கேஸ் எழுதிய 'தனிமையின் நூறு ஆண்டுகள்' நாவல் தமிழ் வடிவம் பெறுகிறது. இந்த நாவலின் வெளியீடு வெறும் நூல் வெளியீடல்ல; இலக்கிய வாசகனின் உற்சாகக் கொண்டாட்டம்.

# கிளாசிக் வரிசை – சிறுகதைகள்


**நவீன இந்திய கிளாசிக் சிறுகதை வரிசை**

## பெருமரங்கள் விழும்போது

### என்.எஸ். மாதவன்

தமிழில்: **நிர்மால்யா**

**ரூ. 140 (வி.பி.பி.யில் ரூ. 140)**




சம கால மலையாள இலக்கியத்தில் நவீனத்துவம் பெரும் வீச்சை நிகழ்த்திய எழுபதுகளில் அறிமுகமானவர் என்.எஸ். மாதவன். நவீனத்துவத்தை அடியொற்றி இயங்கியவர். எனினும் அதன் பொதுப் போக்கிலிருந்து முற்றிலும் மாறுபட்ட சிறுகதைகள் மூலம் தன்னை நிறுவிக்கொண்டவர்.

மாதவனின் கதைகள் வெறும் புனைவுகளல்ல; வரலாற்று இடையீடுகள். அல்லது வரலாற்றை ஓர் எழுத்தாளனின் நோக்கில் பரிசீலனை செய்யும் எத்தனங்கள். புராணிகங்களிலும் பழைய சரித்திரத்திலும் நிகழ்கால வரலாற்றிலும் பங்கேற்கும் பாத்திரங்களை இன்றைய பின்புலத்தில் விசாரிப்பவை அல்லது சமகால உலகத்துடன் அந்தப் பாத்திரங்களை எதிர்கொள்ள வைப்பவை மாதவனின் கதைகள். சரியாகச் சொன்னால் வரலாறு இல்லாதவர்களும் வரலாற்றில் புறக்கணிக்கப்பட்டவர்களும் நடத்தும் சரித்திர விசாரணையே இந்தக் கதைகள்.

தன்னுடைய சிறுதைகளில் தனக்குப் பிடித்தவையாக என்.எஸ். மாதவனே தேர்ந்தெடுத்த பன்னிரண்டு கதைகளின் தொகுப்பு இந்நூல்.


**நவீனத் தமிழ் கிளாசிக் சிறுகதை வரிசை**

## எப்போதும் முடிவிலே இன்பம்

### புதுமைப்பித்தன்

தொ-ர்: **ராஜகோபாலன். ஜா**

**ரூ. 200 (வி.பி.பி.யில் ரூ. 200)**




நவீனத் தமிழின் ஊற்று முகங்களில் ஒன்று புதுமைப்பித்தன். தமிழ் உரைநடைக்குப் புதிய உயிரும் புனைகலைக்குப் புதிய ஒளியும் வழங்கியவை அவரது படைப்புகள். காலத்தின் முன் மாற்றுக் குன்றாமல் இன்றும் மிளிரும் அவரது சிறு கதைகளே நமது சிறுகதைக் கலைக்கு இலக்கணமும் எடுத்துக்காட்டு களுமாக நிலைத்திருப்பவை.


இத்தொகுப்பு புதுமைப் பித்தனின் 22 கதைகளைக் கொண்டு அவரது படைப்பு மேதைமையின் குறுக்கு வெட்டுச் சித்திரத்தை அளிக்கும் முயற்சி.

## ராஜா வந்திருக்கிறார்

### கு. அழகிரிசாமி

தேர்வும் தொகுப்பும்: **பழ. அதியமான்**

**ரூ. 200 (வி.பி.பி.யில் ரூ. 200)**




கு. அழகிரிசாமயின் கதைகள் எளிய நடை, சித்தரிப்பின் லாவகம், உள்ளோடும் துயர இழை, அல்லது மிதக்கும் நகைச்சுவை, கமழும் மண்ணின் மணம் என அழகுகள் கூடி வந்தவை. தமிழில் சிறுகதைக் காக சாகித்திய அக்காடமி பரிசு பெற்ற முதல் எழுத்தாளர்.

'ராஜா வந்திருக்கிறார்' என்ற அவரது இந்தத் தேர்ந்தெடுத்த கதைகளில் கு. அழகிரிசாமியின் கதைசொல்லும் பன்முக ஆற்றலின் கீற்றுகளை வாசகன் உணர முடியும்.

## சாலப்பரிந்து . . .

### நாஞ்சில்நாடன்

தொ-ர்: **மோகனரங்கன்**

**ரூ. 190 (வி.பி.பி.யில் ரூ. 190)**




நாஞ்சில்நாடனின் கதை என்பது கண்ணால் கண்ட காட்சியையோ காதால் கேட்ட செய்தியையோ மனதால் விரித்துகொண்ட கற்பனை யையோ மாத்திரம் நம்பி எழுதப்பட்ட புனைவு அல்ல. மாறாக அவருடைய கதைகளின் சாராம்சத்தில் உள்ளுறைந்திருப்பது தொன்மையான ஒரு நிலமும், அதன் மொழியும் அவற்றின் தொகை விரிவான பண்பாட்டு செழுமையும் ஆகும். பின்னைப் புதுமையை தாவிப் பற்றும் நாட்டத்தால் உயிர்ப்பான மரபினின் றும் தன் வேர்களை துண்டித்துக் கொண்டு விடாத தன்மையால், காருண்யத்தை நீதியுணர்வை விழுமியங்களை வற்புறுத்தும் வகைமையால் தனித்து நிற்பவை இவரது கதைகள். நாஞ்சிலின் நாற்பது வருடத்துக்கு மேலான எழுத்து வாழ்வின் தடத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இத் தொகுப்பில் அவருடைய ஆகச் சிறந்த கதைகள் இடம்பெற்றுள்ளன.


**மோகனரங்கன்**

## சிறுகதைகள்

### கண்ணீரினூடே தெரியும் வீதி...

**தேவமுகுந்தன்**

**ரூ. 75 (வி.பி.பி.யில் ரூ. 85)**




குறுகிய காலத்தில் குறைவாக எழுதினாலும், புதிய தலைமுறையைச் சேர்ந்த இலங்கைத் தமிழ்ப் படைப்பாளிகளுள் குறிப்பிடத் தகுந்த ஒருவராகத் தன்னை நிலை நிறுத்திக் கொண்டவர் இவர் என்பதை இத்தொகுதி உறுதிப்படுத்துகின்றது.

பொதுவாகவே தனது எல்லாக் கதைகளிலும் தான் ஒரு நல்ல கதைசொல்லி என்பதைத் தேவ முகுந்தன் நிரூபித்திருக்கிறார். கொழும்புச் சூழலை, அதன் சமூக – புவியியல் வரைபடத்தைச் சிறப்பாக வரைந்திருக் கிறார். புதிய தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர்களுள் தேவமுகுந்தனும் முக்கிய இடம்பெறுகிறார் என்பதில் ஐயம் இல்லை.

**பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்**

### குதிரைக்காரன்

**அ. முத்துலிங்கம்**

**ரூ. 120 (வி.பி.பி.யில் ரூ. 120)**




நவீனத் தமிழ் உரைநடைக்கு புதிய பரிமாணத்தையும் வசீகரத்தையும் வீச்சையும் சேர்ப்பது அ. முத்து லிங்கத்தின் எழுத்து. இந்நூலில் அடங்கியுள்ள சிறு கதைகளின் நிகழ்புலங்கள் அமெரிக்கா, கனடா, ஆப்பிரிக்கா, இலங்கை என மாறினாலும் கதை மாந்தர்களின் மனிதநேய மும் மகிழ்ச்சியும் துயரமும் தியாகமும் மாறாமல் முற்றிலும் பரிச்சயமில்லாத தருணங்களைத் தமிழ் வாசகர் மனதில் நிறுத்து கின்றன. ஆசிரியருடைய புனைவின் நிழல் யதார்த்தத்தை மறைப்பதில்லை; அவற்றை அதன் மந்தகதியிலிருந்து விடுவித்துப் பிரகாசமடைய வைக்கிறது. அவரின் அனுபவங்கள் ஒரு மென்மையான ரசவாதத்தால் வாழ்வின் தரிசனமாகிவிடும் வித்தை திரும்பத் திரும்ப நிகழ்கிறது.

(2012இன் மிகச் சிறந்த சிறுகதைத் தொகுப்பாக ஆனந்த விகடன் விருதுபெற்ற நூல்)

### நானும் ஒருவன்

**சுரேஷ்குமார இந்திரஜித்**

**ரூ. 100 (வி.பி.பி.யில் ரூ. 100)**

நவீனத் தமிழ்ச் சிறுகதையுலகில் தனித்துவமான சிறுகதைகளை உருவாக்கியவர், சுரேஷ்குமார இந்திரஜித். மனத்தின் ரகசியங்




களும், வாழ்வின் ரகசியங்களும், தம்மைப் புனைகதைகளாக இவரது மொழியில் எழுதிச் செல்கின்றன. வித்தியாசமான சூழலில், வித்தியாசமான மனிதர்கள், சிருஷ்டிகரமாக இக் கதைகளில் உருவாகியுள்ளார்கள் என்பதோடு, இக்கதைகளில் எழுத்தாளனின் பார்வையும் ஊடுருவி யுள்ளது. இவரது ஒவ்வொரு தொகுப்பிலுள்ள கதைகளும், கதை யமைப்பில் மாறுதல்களுடன் பயணம் செய்துகொண்டிருப்பதால், இத் தொகுப்பிலுள்ள கதைகளும், முந்தைய தொகுப்புகளிலுள்ள கதைகளிலிருந்து மாறுபட்டு, மேலும் மாறுதல்களைச் சந்திக்கச் சென்று கொண்டி ருக்கின்றன.

### ஏமாறும் கலை

**யுவன் சந்திரசேகர்**

**ரூ. 190 (வி.பி.பி.யில் ரூ. 190)**




தமிழில் இன்று எழுதிவரும் எழுத் தாளர்களில் ஆகப் பெரிய கதை சொல்லி யுவன் சந்திரசேகர்தான். அதி நவீனக் கதைசொல்லி. அவருடைய கதைகளை என்னால் ஒருபோதும் சொற்களாக வாசிக்க முடிந்ததில்லை. ஒலியலகு களாகவே வாசிக்கிறேன். கண்களால் புரட்டிச் செல்லும்போதும் அந்தப் பிரதி காதுகளால் கிரகிக்கப்பட்டுப் புரிந்து கொள்ளப்படுகிறது. இதற்கு நேர் மாறானவை யுவனின் கவிதைகள். அவை உரத்த குரல் வாசிப்புக்கு இணங்காதவை. யுவன் சந்திரசேகர் ஒருபோதும் ஒற்றைக் கதையைச் சொல்வதில்லை. கதைகளின் கூட்டணியைத்தான் முன்வைக்கிறார். ஒரு கதைக்குள் சொருகப்பட்ட இன்னொரு கதையும் அதற்குள் வேறொரு கதையும் அவற்றின் உள்ளே மற்றொரு கதையும் பிறிதொரு கதையுமாகச் சொல்லிச் செல்வது அவரது பாணி; எல்லா அனுபவங்களையும் கதைகளின் கதைகளாகவே பார்ப்பதே அவரது கதையாளுமை. முடிவடையக்கூடிய ஒரு கதையையோ அல்லது தொடக்கம் உச்சம் இறுதிச் சமநிலை என்ற மரபான கதையையோ யுவன் சந்திரசேகரால் ஒருபோதும் எழுத, யோசிக்கவே கூட முடியாது என்று எண்ணுகிறேன். இந்த அவதானிப்புகளின் அண்மைய உதாரணம் 12 கதைகள் கொண்ட இத்தொகுப்பு. அவரது முந்தைய கதைகள் கதை சொல்லிக்குக் கட்டுப்பட்டு ஒலித்தவை. இந்தத் தொகுப்பின் கதைகள் சற்று அதிகத் தன்னிச்சையுடன் சஞ்சரிப்பவை.

**சுகுமாரன்**

## உக்கிலு

### குமாரசெல்வா

ரூ. 95 (வி.பி.பி.யில் ரூ. 105)




மனித குலத்தில் வகைமைக்குப் பஞ்சமில்லை. வகைமைமீது கொண்டிருக்கும் பிரியம் இந்தப் பக்கங்களில் உறுதிப்பட்டிருக்கிறது. இது உண்மையில் முழுமைமீது கொள்ளும் விருப்பம்தான். (குமாரசெல்வா) தன் அனுபவ உலகத்தை ஒட்டி நின்று பெற்று, விலகி நின்று சொல்கிறார். எல்லாக் கதைகளிலும் குமிழியிடும் நகைச்சுவை உணர்வு விலகலையும் விமர்சனத்தையுமே காட்டுகின்றன. விவரிப்பின் வக்கணையைத் தவிர்த்துச் சுருக்கத்தின் அடர்த்தியைப் பிடிக்க விழையும் மனம். எழுத்துப் பாங்கில் மறைவுகள் உள்ளன. மீறல்களும் சிடுக்குகளும் உள்ளன. கதையை அர்த்தத்தின் தளத்திலும் காலத்தின் முன்னும் நீவி எடுக்க வேண்டிய சிரமம் சந்தோஷம் தரக்கூடியது.

தமிழின் தற்கால எழுத்திலேயே ஒரு புதிய தடம் இந்தக் கதைகள்.

சுந்தர ராமசாமி

## சாபம்

### சல்மா

ரூ. 110 (வி.பி.பி.யில் ரூ. 110)




சல்மாவின் கதை வெளிகள் பெண்களின் பதற்றமான காலடிகளின் மெல்லிய சப்தங்களால் நிரம்பியவை. அவர்களது கண்ணீரால் ஈரமானவை. மதிப்பீடுகளின் கனத்த சுவர்களால் சூழப்பட்ட வீடு என்னும் வெளிகளுக்குள் பட்டாம்பூச்சிகளைப் போலவும் பொன்வண்டுகளைப் போலவும் பறந்து திரியும் சல்மாவின் பெண் பாத்திரங்கள் மிகச் சிறிய அவ்வெளிகளுக்குள் தமக்கான ஒற்றையடிப் பாதைகளை உருவாக்கிக் கொள்ளும் முனைப்பு கொண்டவர்கள். சல்மாவின் பெண் பாத்திரங்கள் காற்சிலம்பேந்தி பாண்டியனின் அவையில் நீதி கேட்டு நிற்பவர்கள் அல்ல, ஆனால் நவீன உலகில் தமக்கான அடையாளங்களைக் கோருபவர்கள். சல்மா தன் பாத்திரங்களை ஓசையின்றிப் பின்தொடரும் ஒரு கலைஞர். அவர்களுடைய பெருமூச்சுக்களால் கதகதப்பூட்டப்பட்டது அவரது படைப்பு மொழி.


தேவிபாரதி

## வேப்பெண்ணெய்க் கலயம்

### பெருமாள்முருகன்

ரூ. 190 (வி.பி.பி.யில் ரூ. 190)

பெருமாள்முருகனின் நான்காம் சிறுகதைத் தொகுப்பு இது. இதழ்களில் வெளியானபோது பல்வேறு எதிர்வினைகளைப் பெற்ற கதைகள் இதில் உள்ளன. கிராம வாழ்வையே பெரிதும் தம் கதைப் பொருளாகக் கையாளும் இவர் மனித மன வியல்புகளையும் சிடுக்குகளையும் சம்பவங்கள் மூலம் மிக எளிதாகக் காட்சிப்படுத்து கிறார். எல்லாவற்றையும் வெளிப் படுத்திவிடாமல் வாசகருக்கான திறப்புகளைத் தன்னகத்தே கொண்டதே படைப்பு என்னும் உணர்வுடன் செறிவாக எழுதப் பட்டுள்ளன இக்கதைகள்.




அங்கங்கே கவிதைத் தெறிப்பு தோன்றும் எளிய மொழி இவரது கதைகளுக்கு வசீகரம் தருகிறது.

## பள்ளம்

### சுந்தர ராமசாமி

ரூ. 60 (வி.பி.பி.யில் ரூ. 70)




சு.ரா.வின் ஆறு சிறுகதைகளின் தொகுப்பு இந்நூல். 1985ஆம் ஆண்டில் வெளிவந்த தொகுப்பின் மறு பிரசுரம். ‘ஆத்மாராம் சோயித் ராம்’, ‘ரத்னாபாயின் ஆங்கிலம்’ போன்ற சு.ரா.வின் மிகச்சிறந்த கதைகளாகப் பேசப்பட்ட கதைகளை உள்ளடக்கிய தொகுப்பு.

## ஒரு பாதையின் கதை

### குப்பிழான் ஐ. சண்முகன்

ரூ. 95 (வி.பி.பி.யில் ரூ. 105)




இளமைக்கேயுள்ள உள்ளக் கிளர்ச்சியையும், உணர்வுக் கொந்தளிப்பையும் கருப்பொருளாகக் கொண்ட சண்முகனின் கதைகளின் ஊடும் பாவுமாக இருப்பவை கனவுகளும், துயர நினைவுகளுமேயாகும். காட்சித் தன்மையும், கற்பனாவாத இயல்பும், உணர்வுநயப் பாங்கும் ஒருங்கேயமைந்த அவரது மொழி இக்கதைகளை துல்லியமான நீர்வண்ண ஓவியங்களாக மாற்றி விடுகிறது. சில வண்ணங்கள் மாத்திரம் மிகுதியாக உபயோகிக்கும் ஓர் ஓவியனைப்போல இவரும் உள்ளத்தெறிப்பின்பாற்பட்ட சில உணர்விழைகளை மட்டுமே திரும்பத் திரும்ப மீட்டிப் பார்த்திருக்கிறார். மிகுந்த அழகுணர்ச்சியோடு தீட்டப்பட்டு, அதனாலேயே அத்தனை அழுத்தமாக அமையவில்லையோ என்ற ஏக்க உணர்வை கிளர்த்தும்படியாக அமைந்துவிட்டிருப்பவை இக்கதைகள்.

# கவிதைகள்

முதல் கவிநூல் வரிசை

## அன்று வேறு கிழமை

**ஞானக்கூத்தன்**

**ரூ. 60 (வி.பி.பி.யில் ரூ. 70)**




இலக்கியத்தில் நிகழும் மாற்றம் என்பது வடிவத்தில் மட்டும் நிகழ்வது அல்ல; உணர்வு நிலையில் ஏற்படுவது. கவிஞனின் ஆளுமையும் பார்வையும் அவனது கவிதையாக்கத்திலும் பிரதிபலிக்கும். கவிஞன் கையாளும் வடிவம் அவன் கருதும் மையப் பொருளையும் பாதிக்கும். அதற்குப் பொருந்தும் மிகச் சரியான உதாரணங்களில் ஒன்றாக ஞானக்கூத்தன் கவிதைகள் இருக்கின்றன.

வெளிவந்து ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்குப் பின்பும் ‘அன்று வேறு கிழமை’ சமகாலப் பொருத்தமுடைய கவிதைகளின் தொகுப்பாகவே படுகிறது. புதுப்புது அபத்தங்களைத் தரிசித்துக்கொண்டிருப்பதும் அதன் எதிர்வினையை இந்தக் கவிதைகளில் காண முடிவதும்தான் காரணமாக இருக்குமோ?

## கோடைகாலக் குறிப்புகள்

**சுகுமாரன்**

**ரூ. 60 (வி.பி.பி.யில் ரூ. 70)**




யதார்த்த வாழ்வின் மீதான தேடல், விசாரணை சற்றும் மிகைப்படுத்தப்படாமல் ஆரவாரமற்ற கவிதை அனுபவங்களாகத் தளமாற்றம் பெறுகின்றன. வார்த்தைகள் முறுக்கிக் கொண்டு அவஸ்தைப் படாமல் – படுத்தாமல் அனுபவ உணர்வுகளின் சாராம்சத்தால் கூர்மையடைந்து மன உணர்வுகளில் பாய்ந்து அதிர்வடையச் செய்கின்றன. இதற்கேற்ப செறிவான படிமங்களும், இறுக்கமான கவிதை அமைப்பும் உயிர்த் துடிப்புடன் வெகு இயல்பாக இணைந்து பன்முக அர்த்தத் தளத்தில் இயங்கிக் கவிதைக் கலையாகப் பரிமாணம் கொள்கிறது. இதன் காரணமாகவே இன்றைய இளங்கவிஞர்களில் சுகுமாரன் முதன்மையாக நம் கவனிப்புக்குள்ளாகிறார்.

**ராஜமார்த்தாண்டன்**

காலச்சுவடு இதழ் 1, ஜனவரி – மார்ச் 1988

நவீனத் தமிழ் கிளாசிக் கவிதை வரிசை

## நகுலன்
## தேர்ந்தெடுத்த கவிதைகள்

தொகுப்பாசிரியர்: **யுவன் சந்திரசேகர்**

**ரூ. 75 (வி.பி.பி.யில் ரூ. 85)**




பௌதீக உலகை முழுக்கக் கொண்டாடுபவராகவும் அல்லாமல், அதைக் கேவலம் என நிராகரிப்பவராகவும் அல்லாமல் இவை இரண்டுக்கும் வெளியில் இயங்கியவர் நகுலன். இந்த அடிப்படையில் அவரை Metaphysical கவிஞர் எனச் சொல்லலாம். அதாவது பௌதீக உலகிற்கு அப்பால் செல்லக் கூடிய கவிமனம் அவருடையது.

**யுவன் சந்திரசேகர்**

நகுலனின் உலகத்தை வேறொருவர் உருவாக்க முடியுமெனத் தோன்ற வில்லை. அதுமட்டுமல்ல, எல்லோரும் தனக்குள்ளிருந்து வெளியேறிக் கொண்டிருக்கும் போது, நகுலன் தொடர்ந்து தனக்குள் உள்நோக்கிச் சென்று கொண்டிருந்தார். கவிதையில் மட்டுமல்ல. அவருடைய நாவல்களிலும் இதைத் தொடர்ந்தார். அந்த வகையில் தமிழின் தனித்துவமிக்க இலக்கியவாதி அவர். நகுலன் நிழலை வேண்டுமானால் தீண்ட முடியுமே தவிர நகுலனின் சுடரை யாராலும் தொட முடியாது.

**சுகுமாரன்**

கவித்தொகை:

## வாரிச் சூடினும் பார்ப்பவரில்லை

**சீனக் கவிதைகள்**

**தமிழில்: பயணி**

**ரூ. 140 (வி.பி.பி.யில் ரூ. 140)**




*கவித்தொகை*

சீன இலக்கிய வரலாற்றின் முதல் நூல்.

சீனாவின் அரசியல், கலை மற்றும் சமூக வாழ்வை நிர்ணயித்த நூல்.

நாட்டுப் பாடல்கள், விழாப் பாடல்கள், வேண்டுதல் பாடல்களின் தொகுப்பு.

மிக நெடியதும் வளமானதுமான சீன மரபு இலக்கியக் கருவூலத்திலிருந்து எந்த நூலும் தமிழில் இதுவரை நேரடியாக மொழி பெயர்க்கப்பட்டதில்லை என்ற வசை இன்று பயணியால் கழிந்தது.

**ஆ.இரா. வேங்கடாசலபதி**

மூவாயிரமாண்டுப் பழமையையும் முற்றிலும் வேறுபட்ட மொழியமைப்பையும் கடந்து சீனச் சாயல் சிதையாமல் தமிழாகியிருக்கும் 'கவித்தொகை'யைத் தாம் கலந்து பயிலும் எவரும் அது காட்டும் வாழ்வின் துடிப்பையும் கவித்துவத்தையும் உணர முடியும்; தமிழ்ச் செவ்வியல் இலக்கியத் தொடர்புடையோரெனில், மேலும் ஆழ்ந்து திளைக்க முடியும்; பழந்தமிழ்ப் பனுவல்களைச் சீனச் செவ்வியல் ஒளியில் துலக்கிக் காட்ட முடியும்.

மதிவாணன்

## நான்காவது சிங்கம்

### செல்வராஜ் ஜெகதீசன்

ரூ. 60 (வி.பி.பி.யில் ரூ. 70)





சமகால வாழ்வின் சிறு பொழுது களைப் பேசுபவை செல்வராஜ் ஜெகதீசனின் கவிதைகள். மிகையோ ஆர்ப்பாட்டமோ முழக்கமோ இல்லாமல் அந்தப் பொழுதுகளின் நிகழ்வுகள் கவிதைகளாக ஆக்கம் பெறுகின்றன. மொழியிலும் அணுகு முறையிலும் எளிமையானவை இந்தக் கவிதைகள். ஆனால் நவீன மனிதனின் எல்லா சிக்கல்களும் எல்லாத் தடுமாற்றங்களும் இந்த எளிமைக்குள் குவிந்திருக் கின்றன.

செல்வராஜ் ஜெகதீசனின் நான்காவது தொகுப்பு இது.

## சிறகு முளைத்த பெண்

### ஸர்மிளா ஸெய்யித்

ரூ. 80 (வி.பி.பி.யில் ரூ. 90)




சமூகம், மதம், அரசியல், நன்னெறிகள் மூலம் ஒடுக்கப் படும் பெண்மனம் தளைகளைக் களைந்து எறியும் ஓசையின் எதிரொலிகள் ஸர்மிளா ஸெய்யித் தின் கவிதைகள். மதத்தில் கருணைக் குப் பதிலாக வெளிப்படும் சடங்குத் தன்மையையும் அரசியலில் பொது மேன்மைக்கு முரணாகப் பேணப் படும் தன்னலத்தையும் சமூகத்தில் பெண்ணுக்கு அளிக்கப்பட வேண்டிய சமநோக்குக்கு எதிராகப் பூட்டப்படும் விலங்கையும் இந்தக் கவிதைகள் அடையாளம் காட்டு கின்றன. அதே சமயம் அவற்றுக்கு எதிராகக் கலகம் செய்கின்றன. பெண்ணின் உடலும் மனமும் இயைந்து செய்யும் விடுதலை அறிக்கையைக் கவிதைகளாக உருமாற்றியிருக்கிறார் ஸர்மிளா ஸெய்யித்.

கிழக்கிலங்கையிலிருந்து ஒலிக்கும் இன்னொரு புத்திலக்கியப் படைப்பு இந்நூல்.

## யாரோ ஒருவனுக்காக

### சுந்தர ராமசாமி

ரூ. 60 (வி.பி.பி.யில் ரூ. 70)




சுந்தர ராமசாமியின் கவிதைக் காலத்தின் இரண்டாம் பருவத்தில் வெளியான நூல் இது. அங்கதமும் எள்ளலும் தனிமனித உணர்வுகளும் நிரம்பியிருந்த முதல் பருவக் கவிதை களிலிருந்து (நடுநிசி நாய்கள்) முற்றிலும் மாறுபட்டவை 'யாரோ ஒருவனுக்காக' தொகுப்பில் இடம் பெற்ற கவிதைகள். உரைநடையின் தருக்கத்தைச் சார்ந்து கவிதையின் மென் உணர்வில் ஊன்றி படைக்கப் பட்ட கவிதைகள் இவை. அணிகளும் அலங்காரங்களும் துறந்து வாழ்வின் தருணத்தை நேர்முகம் காணும் உந்துதலின் வெளிப்பாடு இந்தப் புதிய கவிதையாக்க முறை.

ஜென்மத்தைப் பொருள்படுத்தும் ஒரு கவிதையைத் தேடும் மனதின் நம்பிக்கை அல்லது கவிதையை நம்பிக்கைக் குரியதாக்கும் வாழ்வின் சமிக்ஞை இந்தத் தொகுப்பு.

## காமத்திப்பூ

### சுகிர்தராணி

ரூ. 50 (வி.பி.பி.யில் ரூ. 60)




துளித் துளிக் காதல்களையும் பெருங் கடல் காமத்தையும் சித்திரிப்பவை இந்நூலின் பெரும்பாலான கவிதைகள். காதலின் சுடரிலும் காமத்தின் நெருப்பிலும் தவித்தும் நிறைவு கண்டும் மனித உடல்கள் – ஆணும் பெண்ணும் – சஞ்சரிக்கின்றன. இந்த சஞ்சாரத்தில் பாலினம் ஒன்றிணை கிறது. இயற்கை மானுடத்துடன் சங்கமிக்கிறது. பொழுதுகள் பெண்ணின் பருவங்களாகின்றன. காதலையும் காமத்தையும் தனது பரிணாமத்தின் சூழலாக மாற்றிக்கொள்கிறது காலம்.

தன்னையும் தனது காலத்தையும் எழுதுவதன் மூலம், தான் சார்ந்திருக்கும் சமூகத்தையும் உலகையும் இந்தக் கவிதைகளில் வெளிப்படுத்துகிறார் சுகிர்தராணி.


## என்னைக் கடவுளாக்கிய தவிட்டுக்குருவி

### வா. மணிகண்டன்

ரூ. 70 (வி.பி.பி.யில் ரூ. 80)

காதல், காமம், மரணம், கேளிக்கை, கடவுள் துரோகம், சுய இருப்பு ஆகியவை நவீன வாழ்வில் நிகழ்த்தும் பகடையாட்டங்கள் குறித்தான சிந்தனைகள், அவற்றிற்கு மனித மனம் அரங்கேற்றும் எதிர்வினைகள், இந்தச்

சிந்தனைகளுக்கும் வினைகளுக்கும் இடையேயான ஊசலாட்டம் – இவையே வா.மணிகண்டனின் கவிதைகளின் சாரம்.





தன்னிடமிருந்து நுரைத்துப் பொங்கும் உணர்ச்சிகள் நசுக்கப்படுகின்ற கணத்தில் வெளியேற முயற்சிக்கும் நகர மனிதனின் சிதைக்கப்பட்ட குரல்வேற்றுமைகளாக இந்தக் கவிதைகள் உருக்கொள்கின்றன.

## ஏழிலைக் கிழங்கின் மாமிசம்

### இரா. சின்னசாமி

ரூ. 60 (வி.பி.பி.யில் ரூ. 70)




ஆதி வேளாண் நில மனிதரின் மூர்க்கம் உறைந்திருக்கும் இக் கவிதைகள், தான் கடந்து வந்த நீண்ட


பருவ காலங்களின் உளவியல் கதைகளை முதிர்ச்சியான நிலையில் எழுதிப் பார்த்திருக்கின்றன. நமது வாழ்வெனும் சட்டகத்தில் தாவர, விலங்குணர்ச்சிகளின் இயல்பு நிலைகளை அதிகரித்துக் காட்டும் இத் தன்மை

தமிழ் வாழ்வின் தொன்மையை நவீனமாக மட்டுமல்ல நம்மெல்லோரின் உள்ளிருக்கும் இழந்துபோன வேளாண் நினைவுகளையும், அதன் காமங்களையும் மீட்டுருவாக்கம் செய்வதாகவும் சொல்லலாம். பழங்குடிகளுக்கும் நிலவுடைமைச் சமூகத்திற்கும் இடையே பழைய உற்பத்தி உறவுகளின் தோற்றுவாய்கள் குறித்து இன்றைய சமுதாயத்தில் விகர்ப்பமின்றிப் பேசும் இது ஒரு முக்கியமான, முற்றிலும் சுவாரஸ்யமான அரசியல் கலந்த அழகியல் தொகுப்பு.

## பகல் தண்டவாளத்தில் ரயில்

### சோலைக்கிளி

ரூ. 75 (வி.பி.பி.யில் ரூ. 85)




நிலைத்திருக்கும் எல்லாவற்றின் பின்னும் – அது அரசியலாகவோ இலக்கியமாகவோ சமூக தனி மனித வாழ்வாகவோ இருக்கலாம் – உள்ள தோற்ற உண்மையை சந்தேகிக்கின்றன இந்தக் கவிதைகள். அனுபவமோ அறிவுரையோ அறவுரையோ எதுவாகவும் இருக்கலாம், அவற்றின் ஆழத்திலுள்ள நிஜத்தைத் தேடி ஆராய்கிறார் கவிஞர். இந்த இரண்டு நிலைகள் ஒன்றிணையும் புள்ளியில் தான் இந்தக் கவிதைகளின் உலகம் இயங்குகிறது. அந்த உலகம் எளிமையானது; அதே சமயம் பிரத்தியேகமானது. அந்த உலகில் கேட்கும் மொழி இயல்பானது; அதே சமயம் சிக்கலானது. எளிமையைச் சிக்கலானதாகவும் முரண்களை இயல்பானதாகவும் முன்வைப்பவர் சோலைக்கிளி.

## நான் ஆத்மாநாம் பேசுகிறேன்

### ராணி திலக்

ரூ. 60 (வி.பி.பி.யில் ரூ. 70)




சமகாலக் கவிதையில் அபத்தங்களின் தரிசனத்தைத் துல்லியமாகச் சித்தரிக்கும் எழுத்துகள் இந்தத் தொகுதியில் உள்ளவை. அழகாகவும் எதிர்ப்பாகவும் வியப்பாகவும் சிக்கலாகவும் தனிமையாகவும் நமது காலத்தின் அபத்தம் உருவம் கொள்கிறது. 'வாசிக்கும் போதோ எழுதும்போதோ அல்லது சிந்திக்கும் போதோ ஒரு கவிஞன் கட்டாயம் மூட நம்பிக்கையில் வாழ்பவராக இருக்க வேண்டும்' என்று சொல்லிக் கொள்ளும் ராணி திலக் இந்தக் கூற்றின் மூலம் கேள்விக்குட்படுத்துவது வாசகனின் இருப்பை; காலத்தின் நகர்வை.

## வெள்ளிசனிபுதன் ஞாயிறுவியாழன்செவ்வாய்

### பெருமாள்முருகன்

ரூ. 75 (வி.பி.பி.யில் ரூ. 85)




அனுபவத்தைக் கவிதை படிமமாக்குகிறது. புனைகதை வரலாறாக்குகிறது என்பது ஓர் இலக்கிய அளவீடு. இவ்விரு அளவீட்டிலும் கைவரிசை காட்டுபவர் பெருமாள்முருகன். இது அவரது நான்காவது கவிதைத் தொகுப்பு.

சின்னக் குத்தல், கூரிய விமர்சனம், குழந்தைமையின் ஏக்கம், குழந்தை உலகம் பற்றிய வியப்பு, இயற்கை இழப்பு, இயற்கை மீதான பரிவு, சிறு பொழுதுகளில் முடிவடையும் காலம், அநாதி காலத்தின் நொடிப் பொழுதுகள், அரசியல் நக்கல், அரசியல் கரிசனம் என்று அனுபவங்களின் வெவ்வேறு நிலைகளை இந்தக் கவிதைகளில் முன்வைக்கிறார். அதுவும் கனவு கனியும் தருணங்களின் படிமங்களாக.

## இருள் தின்ற ஈழம்

### தேவஅபிரா

ரூ. 80 (வி.பி.பி.யில் ரூ. 90)

தேவஅபிராவின் மொழி எளிமையானது. சிக்கலற்ற தெளிந்த நீரருவிபோலத் தவழ்ந்து தவழ்ந்து ஓடுவது. அழகும் தெளிவும்





கொண்ட நளினமும் அதேவேளை திசை தேடும் ஆர்வமும் வேகமும் கொண்டது. நேரடியாகவே அதில் இறங்கி அதன் குளிர்மையை, ஒட்ட வேகத்தை, ஆழத்தை, எளிமையை உணர்ந்தபடியே யாரும் அதை அள்ளிப் பருக முடியும். அதில் நீங்கள் உங்களைக் காண முடியும். உங்கள் ஆசைகளை, கேள்விகளை, அனுபவங்களை அது பேசுவதைக் கண்டு அனுபவிக்க முடியும். வெளிப்படையான, நெஞ்சிலிருந்து நேர்மையாகவும் நேரடியாகவும் வருகின்ற வார்த்தைகளாக அவை வருகின்றன.

**எஸ்.கே. விக்னேஸ்வரன்**

## வியூகம்கொள்ளும் காய்கள்

### பி. மதியழகன்

**ரூ. 75 (வி.பி.பி.யில் ரூ. 85)**




தனது இருக்கையில் வந்தமர்ந்த பயணியைப் போல் சட்டென்று நம்மை ஆட்கொள்கின்றன மதியழகனின் கவிதைகள். அக்கறை, பொறுப்பு, அழகு இன்னும் சில சொற்றொடர் களைப் பொருத்திப் பார்க்காமல் தனக்கே உரிய முழுச் சுதந்திரத் துடன் கவிதையில் பயணம் மேற் கொண்டிருப்பதுதான் மதியின் நடை. சில கவிதைகளில் தலைப்புகளைத் தவிர்த்ததற்குக் காரணமும் இதுதான்.

மதியழகனின் வார்த்தையில் ‘மௌனம் சொற்களின் புதையல்...’

**புதுவை இளவேனில்**

---

### வி.பி.பி. யில் வாங்குங்கள் !

- காலச்சுவடு பதிப்பக வெளியீடுகளை வீட்டில் இருந்தபடியே வி.பி.பி.யில் பெற்றுக்கொள்ளுங்கள்.
- உங்கள் தேவையை ஒரு தபால் அட்டையில் அனுப்பினால் போதும். வங்கிக்கோ, தபால் நிலையத்திற்கோ அலைய வேண்டியதில்லை.
- ரூ. 100க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு (ஒன்றுக்கு மேற்பட்ட நூல்களாகவும் இருக்கலாம்) வி.பி.பி. செலவைக் காலச்சுவடு பதிப்பகம் ஏற்றுக்கொள்ளும். ரூ. 100க்குக் குறைந்த விலையுள்ள நூல்களுக்கு வி.பி.பி. கட்டணம் ரூ. 10 தனி.
- தபால்காரரிடம் நீங்கள் நூல் விலை (அல்லது வி.பி.பி. விலை)யுடன் பணவிடைக் கட்டணத்தையும் செலுத்தி நூலைப் பெற்றுக்கொள்ளலாம்.

### முன் பணம் அனுப்புவோர்க்கு

- ரூ. 100க்கு மேற்படும் நூற்களின் விலையை முன்பணமாக அனுப்பினால் புத்தகங்கள் எங்கள் செலவில் கூரியர் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படும்.
- ரூ. 100க்குக் குறைவான நூற்கள் வேண்டுவோர் நூலின் விலையுடன் ரூ. 10 சேர்த்து அனுப்புக.

## காலச்சுவடு புக் கிளப்*

‘காலச்சுவடு புக் கிளப்’பில் உறுப்பினராகுங்கள். உறுப்பினர் கட்டணம் ரூ. 1000. உறுப்பினர்கள் காலச்சுவடு பதிப்பக நூல்களை 25% சலுகையில் பெற்றுக்கொள்ளலாம். நூல்களைச் சென்னை அல்லது நாகர்கோவில் காலச்சுவடு அலுவலகங்களிலும் அனைத்துப் புத்தகக் கண்காட்சிகளிலும் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற்றுக்கொள்வதானால் தபால் கட்டணம் இலவசம். புதிய வெளியீடுகள் பற்றிய தகவல்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும். கிளப் உறுப்பினர்களுக்கு ஓராண்டுக்குக் காலச்சுவடு இதழ்கள் அன்பளிப்பாக அனுப்பிவைக்கப்படும். உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை உண்டு. (புகைப்படம் தேவையில்லை).

**நிபந்தனைகள்**

* இச்சலுகை தனி நபர்களுக்கு மட்டுமே, நிறுவனங்களுக்குப் பொருந்தாது.
* இந்தியாவிற்குள் மட்டும்.
* உறுப்பினர் கட்டணம் திருப்பித்தரப்படமாட்டாது.
* தபால் செலவு இலவசமாக குறைந்தது ரூ. 250 மதிப்புள்ள நூல்களைப் பெறவேண்டும்.

# கட்டுரைகள்


## ஈழம்
## சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்
### ஃபிரான்ஸிஸ் ஹாரிசனின்
**ரூ. 200 (வி.பி.பி.யில் ரூ. 200)**




சாட்சியங்களற்ற போர் என வர்ணிக்கப்பட்ட ஈழ இனப் படுகொலையின் கொடூரமான சாட்சியங்கள் பலவற்றை இந்த நூல் முதல் தடவையாக வெளியே கொண்டு வருகிறது. சர்வதேச சமூகமும், ஐக்கிய நாடுகள் அவையும் எவ்வளவு கவனம் எடுத்து மறைக்க முயன்றாலும் மறுபடியும் மறுபடியும் கொலைக் கள ஆவணங்களும், சாட்சியங் களும், வாக்குமூலங்களும் இன்று பரவலாகக் கிடைக்கின்றன. பிபிசியின் செய்தியாளராக இலங்கையில் பணிபுரிந்த ஃபிரான்ஸிஸ் ஹாரிசனின் (Frances Harrison) இந்த நூல் சான்றுகளையும் தகவல்களையும் உயிர் தப்பிப் பிழைத்தோரின் அவல அனுபவங்களையும் புரிந்துணர்வுடனும் உணர்வுத் தோழமையுடனும் ஒருசேரத் தருகிறது. Still Counting the Dead எனும் ஆங்கில நூலை இணக்கமான தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார் என்.கே. மகாலிங்கம்.

**சேரன்**


## முள்ளிவாய்க்காலில் தொடங்கும் விடுதலை அரசியல்
### பா. செயப்பிரகாசம்
**ரூ. 140 (வி.பி.பி.யில் ரூ. 140)**




புத்தாயிரத்தின் தொடக்கம், தமிழர்களின் மீதான இன அழிப்புப் போர் தீவிரம் பெற்ற தருணம். பத்து ஆண்டுகளுக்குள் அந்தப் பணியை முடித்துவிட்டது இலங்கை ராணுவம். பயங்கர வாதத்திற்கெதிரான போர் என்னும் பெயரால் பல்லாயிரம் தமிழர்கள் அழித்தொழிக்கப்பட்டனர். முள்ளி வாய்க்கால் – இனப்படுகொலையின் பயங்கரமான நினைவுச் சின்னமாக உலக வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது. ஒருபுறம் பயங்கர வாதத்தை ஒழித்துவிட்டதாக சிங்களப் பேரினவாத அரசு முரசு கொட்டுகிறது. மற்றொருபுறம் போர்க்குற்ற அறிக்கைகள், விசாரணைகள். மாறிவிட்ட உலக நிலைமைகளைப் புரிந்துகொள்வது நம்முன்னிருக்கும் பெரும் சவால். அந்தச் சவாலை எதிர்கொள்ளும் முயற்சியே இந்நூல்.


**தேவிபாரதி**

## அற்ற குளத்து அற்புத மீன்கள்
### தேவிபாரதி
**ரூ. 100 (வி.பி.பி.யில் ரூ. 100)**




அரசியல் விதிவிலக்கில்லாமல் எல்லோரது வாழ்வையும் பாதிக்கிறது. முக்கியமாக அது எல்லாவற்றையும் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கிறது. அதனோடு எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ள விரும்பாதபோதும் அது எல் லோரையும் உருக்குலைக் கிறது. அரசியலற்ற ஒரு கருத்தோ செயலோ அநேகமாக இல்லை என்னும் கருத்து எந்த அளவுக்குப் பழைமையானதோ அந்த அளவுக்கு உண்மையானது. இந்த எளிய உண்மையின் மீது கொண்ட கரிசனங்களே இக்கட்டுரைகள்.


## விழுப்புரம் படுகொலை 1978
### விழுப்புரம் கலவரம்: தலித் அறிக்கை
### D. டேவிட்; ப-ர்: ஸ்டாலின் ராஜாங்கம்
**ரூ. 125 (வி.பி.பி.யில் ரூ. 125)**




1978 ஜூலை 25, 26 தேதிகளில் விழுப்புரத்தில் தலித் அல்லாதோருக்கும் தலித்து களுக்கும் இடையே பெரிய கலவரம் ஏற்பட்டது. கலவரத்தில் 12 தலித்துகள் படுகொலை செய்யப்பட்டனர். கலவரத்தை விசாரிக்க அரசாங்கம் நியமித்த விசாரணைக் கமிஷனிடம் தலித் மக்கள் சார்பாக சமர்ப்பிக்கப் பட்ட மாற்று விசாரணை அறிக்கையை சிறுநூலாக D. டேவிட் வெளியிட்டார். அந்நூலைப் புதிய பின்னிணைப்புகளோடு ஸ்டாலின் ராஜாங்கம் பதிப்பித்துள்ளார். விழுப்புரம் படுகொலையைப் பற்றி விரிவான முறையில் வெளியாகும் முதல் நூல் இதுவே.

## பசுமைப்புரட்சியின் கதை
### சங்கீதா ஸ்ரீராம்
**ரூ. 200 (வி.பி.பி.யில் ரூ. 200)**

நவீன இந்தியாவின் மகத்தான நிகழ்வுகளில் ஒன்றாக வர்ணிக்கப்படும் பசுமைப் புரட்சியின் நோக்கங்களையும் பலன்களையும் இந்த நூல் கேள்விக்கு உட்படுத்துகிறது. பசுமைப்




புரட்சி நடந்திருக்காவிட்டால் இந்தியாவில் வறுமையும் பஞ்சமும் கோர தாண்டவம் ஆடியிருக்கும் என்பது போன்ற கூற்றுக்களின் பெறுமானம் என்ன என்பதை இந்நூல் ஆய்வு செய்கிறது. இந்தியாவின் மரபு சார்ந்த வேளாண்மை, அதன் அலாதியான சிறப்பம்சங்கள், அது திட்டமிட்டுச் சீரழிக்கப்பட்ட விதம் ஆகியவை பற்றியும் விரிவாகவும் உரிய ஆதாரங்களுடனும் இந்நூல் பேசுகிறது. வறுமை, பஞ்சம், வரப்பிரசாதம் எனப் பல்வேறு கிளைக் கதைகளைக் கொண்ட பசுமைப் புரட்சியின் நிஜக் கதையை அம்பலப் படுத்துகிறது இந்நூல். இந்திய வேளாண்மையைக் காப்பாற்ற இனி என்ன செய்ய முடியும் என்பது குறித்த நடைமுறை சார்ந்த யோசனைகளையும் இந்நூல் முன்வைக்கிறது.

விரிவான வாசிப்பு, ஆழமான அக்கறை, களப்பணி சார்ந்த அனுபவம் ஆகியவற்றினூடே இந்திய வேளாண்மையைக் குறித்த ஆழமான விவாதங்களை சங்கீதா ஸ்ரீராம் முன்வைக்கிறார். சமூக அக்கறையும் தன்னார்வத் தொண்டுள்ளமும் கொண்ட இவரது இந்த நூல் நம் மண்ணையும் மக்களையும் மாறுபட்ட கோணத்தில் பார்க்க உதவுகிறது.


**அரவிந்தன்**

## நானும் என் எழுத்தும்

### சுந்தர ராமசாமி

**தொ–ர்: கே.என். செந்தில்**

**ரூ. 150 (வி.பி.பி.யில் ரூ. 150)**





தன் படைப்புகளைப் பற்றிய சு.ரா.வின் நாற்பதாண்டு காலப் பதிவுகளின் தொகுப்பு. கட்டுரைகள், என்னுரைகள், உரைகள், கேள்வி பதில், நாட்குறிப்பு எனப் பல வகைமைகளில் சு.ரா.வின் தன்மதிப்பீடுகள் இந்நூலில் தொகுக்கப் பட்டுள்ளன. 'தாழ்வு மனப்பான்மையை அடக்கத்தின் அடையாளமாகவும் தன் திறன் மதித்தலை அகங்காரத்தின் சின்னமாகவும் கரு'தும் மரபைத் துறந்த தன் படைப்பை ஒரு படைப்பாளி நிதானத்துடன் அணுகி மதிப்பிட்டிருப் பதற்கான சாட்சியம் இந்நூல்.

## நீரில் விளக்கெரியும் நந்திக்கடல்

### இளைய அப்துல்லாஹ்

**ரூ. 130 (வி.பி.பி.யில் ரூ. 140)**

போர்கள் அடர்ந்த சொந்த நிலத்திருந்து விரட்டியடிக்கப்பட்ட ஒருவனின் எழுத்துகள். அவை பல்லாயிரம் கடல் மைல்கள் தாண்டிச் சென்று தன் பால்யச் சித்திரத்தைத் தீண்டிப் பார்க்கின்றன. சமகாலத்தின் மிக முக்கியமான அரசியல் நிகழ்வுகளைப் பதிவுசெய்கின்றன. வாழ நேர்ந்துவிட்ட மேற்கத்தியச் சூழலை ஒரு கீழ்த் திசை மனிதன் தனது மனத்தில் ஏந்திப் பதிவுசெய்யும் இவ்வெழுத்துகளில் எவ்விதமான கருத்துத் திணிப்புகளும் இல்லை. மாறாகக் கடந்து செல்லும் நம் காலத்தைப் பற்றிய ஓர் எளிய மனிதனின் எதிர்வினைகளாக இவை எழுகின்றன.




## தமிழ் அழகியல்

### தி.சு. நடராஜன்

**ரூ. 240 (வி.பி.பி.யில் ரூ. 240)**





அழகு, இந்தப் பிரபஞ்சத்தின் அசைவு. இயற்கை, மனிதன், இலக்கியம் உள்ளிட்ட கலை வடிவங்கள் இதைச் சொல்லு கின்றன. புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கும் இந்த அழகு, தமிழிலக்கியச் சூழமைவைத் தெளிவாக்கி அதற்கு மலர்ச்சி தருகிறது. தமிழ் மரபில் பதிவாகியும் புலனாகியும் உயிர்த்துக்கிடக்கும் அழகியலைச், சங்கப் பாடல்களை நோக்கிட்டு, ஒரு கோட்பாடாகத் தேடித்தருகிறது இந்த நூல். கவிதை யெனும் மொழி சார் கலையின் வடிவமைப்பும் இயற்கைப் புலனறிவும் பெண் ஆண் உடல்மொழியும் கதை சொல்லியின் எடுத்துரைப்பும் நடையியலும் உள்ளிட்ட தமிழ் அழகியலின் பன்முகப்பட்டு ஒளிதரும் பரிமாணங்கள், இந்த நூலின் பக்கங்களில் மலர்ச்சி கொண்டுள்ளன.

## அணுசக்தி அரசியல்

### எம்.பி. பரமேசுவரன்

தமிழில்: **தே. மனோ**

**ரூ. 95 (வி.பி.பி.யில் ரூ. 105)**





அணு விஞ்ஞானியும் அணுசக்தியின் கடுமையான, முக்கியமான விமர்சகருமான எம்.பி. பரமேசு வரனின் பல்வேறு கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். கறுத்த ப்ரபாதம் (இருண்ட விடியல், 2008) நூலில் வெளிவந்த கட்டுரைகளுடன் கூடங் குளம் அணுஉலை எதிர்ப்புப் போராட்டம் தொடர்பான திரு. பிரகாஷ் காரட்டின் நிலைபாட்டுக்கு எதிராக எழுதிய கட்டுரை மற்றும் Gateway to a Disastrous Future (எதிர்காலப் பேரிடருக்கான வாயில்) கட்டுரையும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

## கூடங்குளம்
### (அணுசக்தியும் அணு ஆயுதங்களும்)

தேர்வும் தொகுப்பும்: **செல்லப்பா**

**ரூ. 150 (வி.பி.பி.யில் ரூ. 150)**




குடிமைச் சமூகத்தின் வளர்ச்சிக்கென்னும் பெயரளவில் முன்வைக்கப்பட்டாலும் அணுசக்தி மனிதகுல அழிவுக்கே வழிவகுக்கும் என்பதை உணர்ந்த சமூகத்தின் வெவ்வேறு தளங்களில் இயங்கிவரும் அறிவு ஜீவியினர் பல்வேறு சந்தர்ப்பங்களில் காலச்சுவடில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல்.

அணுசக்தி குறித்து மேம்போக்கான புரிதலைக் கொண்டிருக்கும் பொதுச் சமூகத்தின் புரிந்துணர்வைச் செழுமைப்படுத்தும் நோக்கத்தில் அணுசக்தியால் உருவாகும் சுற்றுச் சூழல் மாசுகளையும் விபரீதங்களையும் உணர்ச்சி வசப்படலின்றி, கூர்ந்த அவதானிப்புடனும் தெளிந்த அறிவுடனும் எடுத்துரைக்கின்றன இக்கட்டுரைகள்.

அரசின் கொள்கை முடிவுகளை எதிர்த்து நடத்தப்படும் மக்கள் போராட்டம், அணு உலை செயல்பாட்டு முறைகளில் காணப்படும் குறைகளைக் களைய மேற்கொள்ளப்பட்டிருக்கும் நீதிமன்றப் போராட்டம் என கூடங்குள அணு உலை எதிர்ப்புப் போராட்டத்தின் முழுப் பரிமாணத்தையும் வாசகனின் முன்வைத்து அவனது சிந்தனையைக் கிளறிவிடும் கட்டுரைகள் இவை.

## ‘ஓ’ஹோ பக்கங்கள்
### ஞாநி

**ரூ. 190 (வி.பி.பி.யில் ரூ. 190)**




‘ஓ’ என்ற தமிழ் வியப்பொலிக்கு சமூகச் சிந்தனையளவிலும் இதழியலிலும் முக்கியத்துவத்தை ஏற்படுத்தியவர் ஞாநி. தமிழில் இன்று தொடர்ந்து வெளியாகும் பத்திரிகைப் பத்தி அவருடைய ‘ஓ’ பக்கங்கள் மட்டுமே. மூன்று பிரபல வார இதழ்களிலும் எழுதப்பட்ட, எழுதப்படும் பத்தி என்பது அதன் வாசக ஏற்பை மட்டுமல்ல; அதன் சமூக அக்கறையையும் முதன்மைப்படுத்துகிறது.


சமகாலத் தமிழ் வாழ்வைப் பாதிக்கும் அனைத்துத் துறைகளையும் குறித்துக் கருத்துரைப்பவரும் அவை பற்றித் தொடர்ந்து உரையாடல் நடத்துபவரும் ஞாநி மட்டுமே. ஒரு நிகழ்வைப் பற்றிய பொது அபிப்பிராயத்தை மீறிய சுதந்திரமான சிந்தனை, சமரசமற்ற நிலைப்பாடு, ஆதாரப்பூர்வமான தரவுகள், மத (சாதி, இன) சார்பற்ற பார்வை, கறாரான விமர்சனம், நேரடியான எளிய அணுகுமுறை – இவையே

‘ஓ’ – பக்கங்களின் குணங்கள்.

**நாட்டுப்புறக் கதைகள்**

## அர்ச்சுனனின் தமிழ்க் காதலிகள்
### அ.கா. பெருமாள்

**ரூ. 175 (வி.பி.பி.யில் ரூ. 175)**




இந்தியாவின் பன்முகத்தன்மையையும் பரிமாணங்களையும் மகாபாரதத்தைப் போலப் பிரதிபலிக்கும் இன்னொரு பிரதியைப் பார்க்க முடியாது.

செழுமையான கதை மரபும் இலக்கிய மரபும் கொண்ட தமிழ்ப் பண்பாட்டிலும் பாரதக் கதைகள் கொட்டிக் கிடக்கின்றன. நாட்டார் கதைகளிலும் பழமொழிகளிலும் கதைப்பாடல்களிலும் இவற்றைக் காண முடிகிறது. அத்தகைய கதைகளில் சிலவற்றை மீள்பதிவு செய்வதே இந்நூலின் நோக்கம்.

மகாபாரதப் பாத்திரங்களைத் தமது கதையாடல்களுக்கேற்ப உருமாற்றும் இந்தப் பிரதிகள் வித்தியாசமான வாசிப்பனுபவத்தைத் தருகின்றன. வியாச பாரதத்தில் காணப்படும் சில நிகழ்வுகளின் மாறுபட்ட பிரதிபலிப்பாக வெளிப்படுத்தியும் கட்டுடைப்புச் செய்து உருமாற்றியும் காவிய மாந்தர்களை எதிர்கொள்கின்றன.

நாட்டார் வழக்காற்றியல் துறையில் குறிப்பிடத்தக்க ஆய்வாளர்களில் ஒருவரான அ.கா. பெருமாளின் கள ஆய்வுகளும் வாசிப்பனுபவமும் இந்நூலின் ஆதார வலுவாக விளங்குகின்றன.

**விரைவில்**

**காலச்சுவடு வெளியீடாகத் தமிழில்**

## வெட்டுக்கிளிகளை உற்றுக்கேட்டல்

இன அழிப்பு, மறுப்பு, கொண்டாட்டம்

**அருந்ததி ராய்**

தமிழில்: **மணி வேலுப்பிள்ளை**

அருந்ததி ராயின் ஒன்பது ஆணித்தரமான கட்டுரைகளின் தொகுப்பு. உலகின் மாபெரும் ஜனநாயக நாடாக போற்றப்படும் இந்தியாவின் அடிமடியைப் பிடிக்கும் கட்டுரைகள். குஜராத் அரசின் ஆதரவோடு 2002இல் முஸ்லிம்கள் படுகொலைச் செய்யப்பட்டதில் இந்நூல் துவங்குகிறது. வரலாற்றில் ‘முன்னேற்ற’மும் படுகொலையும் கைகோர்த்து நடைபோட்டுள்ளமையை விளக்குகிறது. 2001இல் இந்திய பாராளுமன்றம் தாக்கப்பட்டதைப் பற்றிய மூடுமந்திர விசாரணைகளை ஆராய்கிறது. நீதிமன்றங்களின் பெருகிவரும் வரையறையும் கட்டுபாடுமற்ற அதிகாரத்தின் ஆபத்துகளை எச்சரிக்கிறது. பன்னாட்டு நிறுவனங்களுக்கும், ஊடகங்களுக்கும் அரசும் கூட்டாகச் செயல்படுவதை அம்பலப் படுத்துகிறது. காஷ்மீரில் ஏற்பட்ட எழுச்சி மற்றும் மும்பைத் தாக்குதலோடு நிறைவு பெறுகிறது.

நுண்ணிய அரசியல் பார்வையை கூர்மையான நடையில் வெளிப்படுத்தும் கட்டுரைகள் இவை.

# நவயானா - காலச்சுவடு வெளியீடு

## பீமாயணம்

**தீண்டாமையின் அனுபவங்கள்**

(சித்திரங்களில் அம்பேத்கர் வாழ்க்கைச் சம்பவங்கள்)

கலை:

**துர்காபாய் வ்யாம்,**
**சுபாஷ் வ்யாம்**

கதை:

**ஸ்ரீவித்யா நடராஜன்,**
**எஸ். ஆனந்த்**

தமிழில்: அரவிந்தன்

ரூ. 245 (வி.பி.பி.யில் ரூ. 245)




இந்தியாவில் 'தீண்டத் தகாதவராக' இருப்பது என்றால் என்ன? இந்தியர்களில் சிலர் பிறரைத் தொடுவதை ஏன் இழிவாக நினைக்கிறார்கள்? இந்தியாவின் மகத்தான புரட்சியாளர்களில் ஒருவரான பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் (1891 – 1956), 'தீண்டத் தகாதவராக' வளர்வது மற்றும் தொடர்ந்து பாரபட்சத்திற்கு ஆளாவது ஆகிய அனுபவங்களைப் பதிவு செய்திருக்கிறார். பத்து வயதில் பள்ளியில் பட்ட அனுபவம், கொலம்பியா பல்கலைக்கழகத்திலிருந்து வந்த பிறகு பரோடாவில் கிடைத்த அனுபவம், பயணத்தின்போது பெற்ற அனுபவம் என்று இவை பல விதமானவை. பல்வேறு தடைகளைத் தாண்டிய அம்பேத்கர், இந்தியாவின் அரசியல் சாசனத்தை வடிவமைத்தார். கடைசியில் புத்த மதத்தைத் தழுவினார். அவர் பெற்றது போன்ற அனுபவங்கள் இந்தியாவின் 17 கோடி தலித்துகளை இன்னமும் துரத்துகின்றன. அவர்களுக்கு இன்னமும் நீரும் தங்குமிடம் வாழ்வின் அடிப்படையான கௌரவங்களும் மறுக்கப்படுகின்றன.

பர்தான் – கோண்ட் கலை மரபைச் சேர்ந்த துர்காபாய் வ்யாமும் சுபாஷ் வியாமும், பெரும் சாதனை என்று சொல்லத்தக்க இந்த நூலில், மஹாட் சத்தியாக்கிரகம் போன்ற வரலாற்று நிகழ்வுகளைச் சமகால நிகழ்வுகளுடன் ஊடாடச் செய்கிறார்கள். மரபு சார்ந்த இலக்கணங்களை மீறும் அவர்கள், காவியத் தன்மை கொண்ட தங்கள் அற்புதமான கலையின் மூலம் சித்திரக்கலை மரபுக்குப் புத்துணர்வு அளிக்கிறார்கள்.

---


# M.I.D.S - காலச்சுவடு வெளியீடு

## ஆடம் ஸ்மித்
**முதல்**
## கார்ல் மார்க்ஸ்
**வரை**
## செவ்வியல் அரசியல் பொருளாதாரம்

**எஸ். நீலகண்டன்**

**ரூ. 250 (வி.பி.பி.யில் ரூ. 250)**

எந்தப் பெருநகரத்தின் நடுவில் நின்று பார்த்தாலும் முதலாளியத்தின் அபரிமிதமான உற்பத்தித் திறனையும், அதே சமயம் அதன் இயக்கத்தின் விளைவான பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் வீணடிப்புகளையும் கண்கூடாகக் காணலாம். முதலாளியத்திற்கு மாற்றாகக் கூட்டுறவு, சோசலிச – கம்யூனிஸ்ட் கொள்கைகளைக் கொண்டவர்களும் இருக்கிறார்கள். இரு சாராருக்குமே முதலாளியத்தின் தோற்றம், இலக்கணம், நிறைகுறை ஆகியவற்றை அறிந்து கொள்ளும் ஆர்வம் இருக்கும். அந்த ஆர்வத்தைப் பூர்த்தி செய்ய முனைகிறது இந்நூல். ஆடம் ஸ்மித் முதல் கார்ல் மார்க்ஸ் வரை ஐரோப்பாவில் முதலாளியம் பற்றிச் சிந்தித்த முக்கியச் சிந்தனையாளர்களின் கருத்துரைகளை வரலாற்றுப் பின்னணியோடு இந்நூல் தெளிவாக அறிமுகப்படுத்துகிறது.



சங்கம் - காலச்சுவடு வெளியீடு

# WILD GIRLS, WICKED WORDS

Bilingual Edition

Poems of
**Malathi Maithri, Salma, Kutti Revathi**
and
**Sukirtharani**

[sangam house]

Translated and Edited by
**Lakshmi Holmstrom**

Rate: **295**




2003, at a time when politicians and other establishment figures of Tamil Nadu were caught up in a surge of Tamil chauvinism, a group of men and women, setting themselves up as guardians of Tamil culture, objected publicly to the language of a new generation of women poets, particularly in the work of Malathy Maitri, Salma, Kutti Revathi and Sukirtharani. They charged the women with obscenity and immodesty. During this decade, each of our poets has published more than one further collection, continuing to write and publish as courageously as before.

The works of Malathy Maitri, Salma, Kutti Revathi and Sukirtharani represent the language of a new generation of women poets in Tamil. Each in her unique style has explored the politics of sexuality and a woman's relationship to her body. Ever since the publications of their first collections, over a decade ago, these poets have been persecuted and even served death threats, condemned and vilified publicly, and charged with obscenity and immodesty.

They have refused to be intimidated.

It is perhaps useful to remember that the traditional values prescribed for the 'Good' Tamil woman were accham, madam and naanam (fearfulness, propriety, modesty or shame). Our poets have chosen instead, the opposite virtues of fearlessness, outspokenness, and a ceaseless questioning of prescribed rules. It is surely significant that at different times and variously, they have claimed as their foremothers, role models and equals, Avvai, Velliviidhi and Sappho; Anna Akhmatova, Sylvia Plath and Kamala Das. And Eve, above all, who defied divine authority to pluck the fruit of the Tree of Knowledge. Bad Girls indeed, all of them.

This anthology, through a set of samples presented in the original Tamil and English translation, showcases the beauty and originality in the work of each of the four poets. It celebrates their courage in exercising their freedom to write as they chose, and claiming their own ground.

மாலதி மைத்ரி, சல்மா, குட்டி ரேவதி, சுகிர்தராணி
ஆகியோரின் தேர்ந்தெடுத்த கவிதைகள்

இருமொழித் தொகுப்பு

தொகுப்பும் மொழிபெயர்ப்பும்
**லக்ஷ்மி ஹோம்ஸ்ட்ரோம்**